**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1417/2024 நாள்- 11.02.2026

**வா.சா.2. அய்யனார்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

நான் எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இல்லை. பொதுநலச்சங்கம் நான் வைத்து நடத்தவில்லை. நான் வாதியின் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கு கடனுறுதிசீட்டை பிரதிவாதி தான் கொண்டு வந்தார். பிரதிவாதி கடனுறுதிசீட்டை எழுதிக் கொண்டுவரவில்லை செல்வமணி என்பவர் தான் கடனுறுதிசீட்டை எழுதினார். நான் சிவகாமிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சுடலைமணி லட்சுமியாபுரத்தில் குடியிருந்து வருகிறார். சுடலைமணி எனக்கு உறவினர் இல்லை. கண்ணன் தான் எனக்கு பழக்கமானவர். கண்ணன் வீடு எங்குள்ளது என்று கேட்டால் பணம் வாங்கும் போது லட்சுமியாபுரத்தில் குடியிருந்து வந்தார். கடனுறுதிசீட்டில் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடனுறுதிசீட்டில் நான் கையொப்பம் செய்யும் போது பூர்த்தி செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. செல்வராஜ் எழுதும் போது என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னை சுடலைமணி வீட்டிற்கு பணம் வாங்குவதற்கு கண்ணன் தான் அழைத்து சென்றார். கண்ணன் தான் என்னை அழைத்து சென்றார் என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். கண்ணன் யார் என்று எனக்கு தெரியாது என்றும் வாதி எனக்கு பழக்கமானவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுடலை மணி வீட்டிற்கு செல்லும் போது வேறு நபர்கள் அங்கு இல்லை எஎன்று சொன்னால் செல்வராஜ் அங்கு ஏற்கனவே இருந்தார். நான் பிரதிவாதி கூறி தான் கையொப்பம் செய்தேன். மற்றொரு சாட்சி கையொப்பம் செய்த நபருக்கும் எனக்கும் எந்த உறவும் கிடையாது. பிரதிவாதி எனக்கு யார் என்று தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் கண்ட மற்றொரு சாட்சி கூறியதன் பெயரில் தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு யார் என்றே தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பூர்த்தி செய்யப்பட்ட மைக்கும் என்னுடைய சாட்சி கையொப்பம் செய்த மையும் வேறு வேறு என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் முதலில் யார் பெயர் இருந்தது என்று எனக்கு தெரியாது. கடனுறுதிசீட்டில் கண்ட தேதியன்று பிரதிவாதி வாதியிடம் பணம் வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக கடனுறதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. நான் இதுவரைக்கும் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்ததில்லை. பிரதிவாதி தான் என்னை அழைத்து சென்றார் என்ற விவரத்தையும், கண்ணன் தான் கடனுறுதிசீட்டை வாங்கி வந்தார் என்ற விவரத்தையும் என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணைக்கான தகவலை நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.